| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **125/2021** |
| **DATE** | : | **12.03.2026** |
| **பெயர்** | : | **வினோபாஜி** |
| **தந்தை பெயர்** | : | **கிருஷ்ணன்** |

**வா.சா.2 முதல் விசாரணை**

1. நான் தென்னேரி கிராமத்தில் சுமார் 60 வருடங்களாக வசித்து வருகிறேன். தற்போது எனக்கு 68 வயதாகிறது. நான் தென்னேரி ஊராட்சி மன்ற தலைவராக இருந்து வருகிறேன். கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதிகளை எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் வாதிகளை எனக்கு தெரியும். அவர்களது முன்னோர்களையும் தெரியும். வாதிகளும், அவர்களது முன்னோர்களும் நான் பிறப்பதற்கு முன்பிருந்தே அங்கு வசித்து வருகிறார்கள். வாதி இருக்கும் வீடு ஏழுமலை, பூமிநாதன் மற்றும் விஜயாவிற்கு சொந்தமானது. வாதி வசித்து வரும் வீட்டிற்கு எதிரில் ஒரு CSI சர்ச்சும் பள்ளியும் உள்ளது.

2. வாலாஜாபாத்தில் இருந்து சுங்குவார்சத்திரம் செல்லும் பிரதான சாலையில் இருந்து சர்ச் கிழக்கில் உள்ளது, ஒரு 20 மீட்டர் தூரம் இருக்கும். அந்த சாலையில் இருந்து வாதியின் வீட்டிற்கும், சர்ச்சிற்கும் ஒரே வழியாக தான் செல்வார்கள். வாதியின் வீட்டிற்கும் சர்ச்சிற்கும் பொது மக்கள் பயன்பாட்டிற்கும் அங்கு வேறு வழி கிடையாது. அந்த வழியில் சர்ச் நிர்வாகிகள் சுவர் எழுப்ப வந்த போது வாதிகளும் பொது மக்களும் சேர்ந்து அதை நிறுத்திவிட்டார்கள் என்று நான் கேள்விபட்டேன் நேரடியாக தெரியாது.

3. வாதி இந்த வழக்கை வழி தடுக்கக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார். நான் பஞ்சாயத்து தலைவராக இருப்பதால் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார்கள்.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN
Date: 2026.03.12 19:13:00 +0530